முனைவர் தே. தேன்மொழி
உதவிப்பேராசிரியர்
வேல்ஸ் பல்கலைக்கழகம்
சென்னை -117
செல்: 8610928727

# சிலம்பில் மகளிர் வாழ்வியல் முரண்

**ஆய்வுச் சுருக்கம்**

சிலப்பதிகாரம், இந்தியாவின் பண்டையக் கால இலக்கியங்களில் மகளிர் வாழ்வியலையும் சமூகப் பண்பையும் வெளிப்படுத்தும் சிறந்த இரட்டைக் காப்பியங்களில் ஒன்றாகும். இக்காப்பியம் மகளிரின் இல்லற, அரசியல் மற்றும் சமூக கடமைகளைச் சிறப்பாகப் பதிவு செய்கிறது. கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி போன்ற கதாப்பாத்திரங்கள் மூலம் பெண்களின் கற்பு, திறமை, வீரத் தன்மை, பொறுப்பு மற்றும் பொது நலச்செயல் ஆகியவைகளை வெளிப்படுத்துகிறது. கண்ணகியின் கடுமையான துன்பங்கள், குடும்பப்பணி, கணவன் மீது கட்டுப்பாடு, சமூக நீதிக்கான போராட்டம் ஆகியவை இக்காப்பியத்தின் முக்கிய அம்சமாகும். அதே நேரத்தில் மாதவி போன்ற கதாப்பாத்திரங்கள் சமூகச் சூழல், குல ஒழுக்கம் மற்றும் இல்லற நடத்தை ஆகியவற்றை எடுத்துக்காட்டுகின்றனர். இக்காப்பியம் பெண்களின் உயரிய மனநிலை மற்றும் கற்பு நெறியைக் காட்டுவதுடன், சமுதாயத்தில் பெண்களின் பெருமையை உணர்த்துகிறது. இதன் மூலம் இலக்கியச் சூழலில் பெண்கள் எந்த அளவு முக்கிய பங்கு வகிப்பார்கள் என்பது தெளிவாக வெளிப்படுகிறது.

**திறவுச்சொற்கள்** : சிலப்பதிகாரம்,மகளிர் வாழ்க்கை,இல்லற கடமை, கற்பு நெறி, கண்ணகி, மாதவி,சமூகப் பண்பு,இரட்டைக் காப்பியம்.

**முன்னுரை**

காப்பியங்களில் சிறந்ததாகவும் இரட்டைக்காப்பியங்களில் ஒன்றாகவும் போற்றப்படும் சிலப்பதிகாரம் பண்டைய கால மக்களின் வாழ்வியலையும் வெளிக்காட்டும் கருத்துப்பெட்டகமாகத் திகழ்கின்றது. அதனடிப்படையில் சிலப்பதிகாரம் வெளிப்படுத்தும் மகளிரின் இன்ப துன்பம் நிறைந்த முரண்பட்ட வாழ்வியலை எடுத்தியம்பும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது. மகளிர் இல்லற வாழ்வில் தமக்குரிய கடமையில் தவறாமலும், அரசியலில் அறநெறி வழுவாமலும், பொதுநலத்தில் அக்கறையுடனும், கடமைகளில் கண்ணும் கருத்தாகவும்,  ஈடுபட்டுள்ளனர் சிலப்பதிகாரக் காப்பியத்தில் அரசனின் மனைவி முதல் சாதாரணக் குடிமகள் வரை கதாப்பாத்திரமாக இடம்பெற்றுள்ளது தனிச்சிறப்பாகும். விருந்தோம்பல். குடும்பத்தில் கடமையாற்றுதல் போன்றவற்றில் பெண்கள் சிறந்து விளங்கியுள்ளனர். கண்ணகி இல்லறம் பேணும் பெண்ணாகவும். எதிர்மொழி பேசாத பதுமையாகவும் விளங்குகிறாள் என்பன போன்ற பல்வேறுபட்ட கருத்துகளை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

பெண்கள் நாட்டின் கண்கள். பெண்கள் வீட்டின் விடிவெள்ளி என்பது பொய்யல்ல மெய்தான் வீட்டிலும் சமுதாயத்திலும் பெண்களின் பங்கு அளவிடற்கரியவாகும். கோவில் இல்லாத ஊரில் குடி இருப்பது பாழ் என்பது போல பெண் இல்லாத வீடு விடாக இருக்காது.

**"மங்கையராகப் பிறப்பதற்கேநல்ல**
**மாதவம் செய்திட வேண்டுமம்மா"**

என்கிறார்.(Kavimani Thesiya Vinaayakam Pillai, 2019). மேலும் பெண்ணின் சிறப்பைப் பற்றி வள்ளுவப் பெருந்தகை வாழ்க்கை துணை நலம் எனும் அதிகாரத்தில்

**பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**

**திண்மையுண் டாகப் பெறின்**

என்கிறார் (Parimelathagar, 1985). அஃதாவது மனையிடத்தில் கற்பு என்னும் மன உறுதி இருக்கப் பெற்றாள், அவளை விட மேலான சொத்து கணவனுக்கு வேறு இல்லை எனலாம். ஒவ்வொரு பெண்ணிற்கும் அவர்களுடைய மனஉறுதிதான் வலிமையைத் தருகிறது.

ஐம்பெருங்காப்பியங்களுள் முதன்மையானது, 'சிலப்பதிகாரம்' ஆகும். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஒற்றுமைப் பண்புகளால் 'இரட்டைக் காப்பியங்கள்' என்று போற்றப்படுகின்றன. இன்பமும் துன்பமும் நிறைந்த மனித வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை மையப்படுத்தியே இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன.

சிலப்பதிகாரத்தின் தலைவியான கண்ணகி களங்கமற்ற பெண்ணொழுக்கத்தின் எடுத்துக்காட்டாகவும் கற்பு நெறியின் அளவு கோலாகவும் இளங்கோ படைத்துள்ளார்.

**"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**

**பெய்யெனப் பெய்யும் மழை"**

வழுவாமல் மாதவி ஆடற்கலையின் ஆனிவேராகவும் ஆடற்கலையின் ஆழம் உணர்ந்தவளாகவும் திகழ்ந்தாள். கணிகையர் குலத்தில் தோன்றினாலும் கோவலனுக்கென்றே கற்புநெறியில் வாழ்ந்தவளாக படைத்துள்ளார்.

**கண்ணகி**

சிலப்பதிகாரம் வணிகர் குலப் பெண்ணின் கற்பு திறத்தையும் வீரத்தையும் புரட்சியையும் கூறுவதாய் உள்ளது. கண்ணகி காற் சிலம்பை காரணமாக வைத்து எழுதப்பட்ட காப்பியம் தான் சிலப்பதிகாரம் சிலப்பதிகாரத்தின் தொடக்கத்தில் மங்கள வாழ்த்துப் பாடலிலே பெண் குழந்தையைப் பேசும்போது கண்ணகியைக் குறிப்பிடுகிறார் இளங்கோவடிகள்.

**"மாகவான் நிகர் வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்"** என்று தந்தையின் மூலம் கண்ணகியை அறிமுகம் செய்கிறார் (Manivasagan 2019) இளங்கோவடிகள் வள்ளல் தன்மை கொண்ட மாநாய்கன் எனும் தனிவணிகள் குலம் தழைக்க வந்த பூங்கொடி போன்றவன் கண்ணகினைப் போற்றுவதை காப்பியம் வழி அறியலாம்.

பொதுவாக ஆண் குழந்தையைப் பெற்றவர்கள் குலத்தை தழைக்கச் செய்ய வாரிசு வந்துவிட்டது என்று சமூகம் பேசுவதை நாம் அறிந்ததே. ஆனால், பெண் குழந்தையால் குலம் தழைக்கிறது, தந்தையும் சிறப்புப் பெறுகிறார் (Appathura 2004) என்று இளங்கோவடிகள் பதிவுசெய்து இருப்பதன் மூலம் சமூகத்தின் ஒருசாரார் ஆண் மகவைப் போற்றுவதும் மற்றொருசாரார் பெண் மகவு பிறந்ததும் நம் குலத்திற்கு மகாலட்சுமியே வந்து பிறந்ததாக பெருமைக் கொள்வர் அதுபோலவே அடிகளாரும் பெண்மகவு பேறு பெற்றுத்தரும் என்பதையும் கண்ணகி பெண் தெய்வமாகப் போற்றப்பெறுவாள் என்பதை முன் கூட்டியே உணர்த்துவது போலவே கண்ணகியைப் பதிவு செய்து இருப்பது மகளிர்க்கு பெருமையாகும்.

இல்வாழ்க்கை எனும் அதிகாரத்தில் கணவன் மனைவி என்னும் இருபாலருக்கும் பொதுவான அறங்களைக் கூறுகிறார் வள்ளுவர்,

**"துறந்தார்க்கு துவ்வாதவர்க்கும் இறத்தார்க்கும்**

**இவ்வாழ்வான் என்பான் துணை"**

என்னும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க குழந்தைப் பருவத்தில் இருந்து பன்னிரண்டு வயது பருவம் அடைந்த கண்ணகிக்கும் பதினாறு வயதுநிரம்பிய கோவலனுக்கும் வைதீக முறையில் திருமண ஏற்பாடு நடைபெறுகிறது (Parimelalhagar, 1986; Devaneya Pavanar, 2012).

தமிழர் வாழ்க்கை களவியலில் தொடங்கிக் கற்பியலிலே கலக்கும் என்கிறார் (Manivasagan, 2019) தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இந்த விதிக்கு விலக்காகக் கண்ணகி கோவலன் திருமணம் கற்பியல் வழி நடந்ததாகும். அதாவது திருமணத்திற்கு முன் கண்ணகி கோவலன் சந்திக்கவில்லை என்பதை உணரலாம் (Manickam. 2010). கண்ணகி கோவலன் கற்பியல் வாழ்க்கை இன்பமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

**"மாசறு பொண்ணே வலம் புரிமுத்தே!**
**காசறு விரையே கரும் பேதேனே!**
**அரும்பெறல் பாவாய் ஆக உயிர் மருந்தே!**
**பெருங்குடி வணிகன் பெருமட மகளே!**
**------ -------- ------ -------**
**உலவாக் கட்டுரைபல பாராட்டி"**

கண்ணகியும் கோவலனும், காமனும் ரதியுமாக இன்பமாய் இருந்தனர். காப்பிய காலத்திலேயே தனிக்குடித்தனம் பேணுதலைச் சுட்டுகிறார். (Manivasagan,2019)

**"வார் ஒலி கூந்தலைப் பேர் இயல்கிழத்தி**
**மறப்பரும் கேண்மையோடு அறப்பரிச் சாரமும்**
**விருந்துபுறந்தரும் பெருந்தண் வாழ்க்கையும்**
**வேறுபடுத்திருவின் விறுபெறக் காண"**

என்ற வரிகளில், உயர் பண்புகளை உடையவர்களாக மாமியார் இருந்திருக்கிறார் என்பதை இளங்கோவடிகள் படைத்துக்காட்டியுள்ளார் (Manivasagam 2019). கணவன் மனைவி தனிக்குடித்தனம் பேணுவதன் மூலம் அவர்கள் விருந்தினரை உபசரித்தல், அறவோரைப் பேணுதல் போன்ற கடமைகளைச் சிறப்பாக ஆற்றுவார்கள் என்று தனிக்குடித்தனம் அமைத்து தந்திருப்பதை காப்பியம் மூலம் அறிவுறுத்துகிறார்.

இவ்வாறு இல்லறக் கடமைகளை இனிதே ஒழுகி வாழ்ந்து வந்த கண்ணகி, கோவலன் கணிகையர் குலப் பெண் மாதவியுடன் வாழத் தலைப்பட்டபின் அனைத்தையும் துறந்தவளாக வாழ்கிறாள். மாதவி ஆர்வ நெஞ்சமொடு, கோவலனோடு அகம் மகிழ்ந்திருந்த வேளையில் கண்ணகி கையற்ற நெஞ்சினளாக வருந்துகின்றாள். இன்பம் துய்ப்பதற்குரிய இளமை வீணே கழிந்தது, கண்ணகிக்கு! அவள் இளமையெல்லாம் வாட, அணிகலன்களை எல்லாம் களைந்து, துன்பநிலையில் காட்சியளிக்கின்றாள்.

**"கலங்கா உள்ளம் கலங்கக் கடைசிவந்து**
**விலங்கி நிமிர் நெடுங்கண் புலம்புமுத்து உறைப்ப"**

(புகார்க் காண்டம், அந்திமாலை சிறப்புச்செய் காதை, 70,71)

**"அம்செஞ் சீறடி அணிசிலம்பு ஒழிய,**
**மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்**
**கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்,**
**மங்கல அணியின் பிறிதுஅணி மகிழாள்"**

( புகார்க் காண்டம், அந்திமாலை சிறப்புச்செய் காதை, 47-50)

தன்னைப் புறக்கணித்த கணவனைப் பற்றியும், காரணமாக அமைந்த மாதவியைப் பற்றியும் பழித்து ஒரு சொல்லும் சொல்லாத கண்ணகியின் பண்புநலன்கள், படிப்பவர் உள்ளத்தைத் துன்பத்தில் ஆழ்த்திவிடுகின்றன.

வெளியுலகம் அறியாதவளாக, கணவன் என்ற நிஜத்தின் நிழலாக வாழும் கண்ணகி, மாதவியின் பொருட்டுத் தன்னைப் பிரிந்தவன் மீண்டும் வந்ததும் 'சிலம்புள கொண்மின்' என்று புன்னகைக்கின்றாள்; வேறு பேச்சில்லை. 'ஏன் பிறந்தீர்? தற்போது வந்த காரணம் என்ன?' என்று வினவின், மீண்டும் பிரிவானோ? என்ற அச்சத்தால் அவள் அமைதியாக இருந்திருக்கலாம். உளவியல் அடிப்படையில், இது ஒரு சிறந்த உத்தியாகும். ஒருவன் தவறிழைக்கும்போது, சுட்டிக் காட்டித் திருத்துதல் நலம். அவனே திருந்தி வாழும்போது அதனைப் பற்றிப் பேசாதிருத்தலே சிறப்பு. கண்ணகியும் இதனையே கையாளுகின்றாள்.

'வண்ணச்சீறடி மண்மகள் அறிந்திலள்' என்ற பெருமைக்குரிய கண்ணகி, துன்பத்தின் தொடர்ச்சியாகப் புகாரிலிருந்து மதுரைக்கு நடந்தே வருகின்றாள்.

**" மதுரை மூதூர் யாது?' என வினவ**
**ஆறுஐங்காதம் நம்அகல்நாட்டு உம்பர்"**

(புகார்க் காண்டம், நாடுகாண் காதை, 41,42)

கோவலனைத் திருத்துவதற்கோ, மீண்டும் அழைப்பதற்கோ எந்த முயற்சியும் செய்யாத கண்ணகி, மதுரை செல்லலாம் 'எழுக' என்றவுடன் உடன் சென்றவள், கவுந்தியடிகளின் ஆதரவால் மாதரி வீட்டில் தங்கியிருக்கும் வேளையில்தான், அதுவும் தனது தவறுகளை எண்ணிக் கோவலன் வருந்திய பின்னரே பேசத் துணிகின்றாள்.

**"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"**

(மதுரைக் காண்டம், கொலைக்களக் காதை, 71-73)

என மனை வாழ்க்கைக்குரிய அறங்களைக் கணவனோடு கூடி நிறைவேற்றும் நல்ல மனைவியாக வாழ முடியாத தன்னுடைய துன்ப நிலையை முதலில் கூறுகின்றாள், கண்ணகி! பெற்றோருக்கும் மற்றோருக்கும் தன் துன்பம் தெரியாத வண்ணம் தான் வாழ்ந்ததைச் சொன்ன கண்ணகி இறுதியில்,

**"போற்றா ஒழுக்கம் புரிந்தீர், யாவதும்**
**மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின்**
**ஏற்றெழுந்தனன் யான்"**

( மதுரைக் காண்டம், கொலைக்களக் காதை, 81-83)

என்று முடிக்கின்றாள். குலத்திற்கு ஒவ்வாத, ஒழுக்கக் கேடுகளைத் தாங்கள் புரிந்தீர். யானோ பெண்களுக்கே உரிய கற்பு நெறியைக் கடைப்பிடித்ததால் 'எழுக' என்றவுடன் எழுந்தேன் என்று, கூறுகின்றாள். சிலம்பு விற்று வருவார், சிறந்த வாழ்க்கை அமையும் என்று எண்ணிக் கொண்டிருந்த வேளையில் கணவன் 'கள்வன்' என்று கொலை செய்யப்பட்டான் என்பது கண்ணகியின் துன்பத்தை மிகுவிக்கும் காட்சியாக அமைந்துள்ளது.

**"கணவனைப் பிரிந்த அவலம் அவளைமிகு மானுடநிலைக்கு உயர்த்தியது; கணவனை இழந்த அவலம் அவளைத் தெய்வ நிலைக்கு உயர்த்தியது"** ( ம.ரா.போ.குருசாமி, சிலம்பு வழிச் சிந்தனை, ப.55) என்று ம.ரா.போ.குருசாமி குறிப்பிட்டுள்ளார். காலம் காலமாக அடிமைப்பட்டு,

வதைபட்டு, பத்தினியாக உருவெடுத்து நிற்கும் ஓர் அடிமை வர்க்கத்தின் எச்சமே, கண்ணகி. அவ்வாறு வாழ்ந்தவள், பாண்டியன் என்ற ஆடவனை, அரசனை எதிர்த்ததன் மூலம் புரட்சிப் பெண்ணாகச் சித்திரிக்கப்பட்டுள்ளாள். சிந்தித்தால், இங்கும் தன்வாழ்வு சீரழிந்ததற்காக அல்லாமல், கணவனுக்கு ஊறு நேர்ந்து விட்டதற்காகவே கண்ணகி பொங்கி எழுவதை உணர முடிகின்றது.

அடிமைகளிடம் தான் புரட்சி மனப்பான்மை தோன்றும். அடக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வாழும் ஒரு சமூகம் என்றாவது ஒருநாள், ஏதாவது ஒரு வகையில் தனது எதிர்ப்பைக் காட்டும். கண்ணகியும் நீதி இறந்ததற்காகப் போராடவில்லை. தன் கணவன் கொல்லப்பட்டுவிட்டான் என்பதாலேயே சீறுகின்றாள். அடிமனத்தில் அடக்கி வைத்திருந்த கண்ணகியின் உள்ளக் குமுறல்கள், எரிமலையாக வெடித்துச் சீறியதில் வியப்பொன்றும் இல்லை.

**“மெய்யில் பொடியும் விரித்த கருங்குழலும்**
**கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் வையைக்கோன்**
**கண்டளவே தோற்றான்”**

(மதுரைக் காண்டம், வழக்குரை காதை, வெண்பா – 3)

கண்ணகி, மதுரை மாநகரில் தலைவிரி கோலத்துடன், கலங்கிய உள்ளத்துடன் நீதி கேட்க வரும்போது, அவளது அலங்கோலம் அவளது துன்பத்தைப் பிரதிபலிக்கின்றது. கோவலன் கொலையுண்டபின், அவனைத் தேடி அலைந்து, அவன் உடல் கிடக்குமிடம் சென்று கதறி அழும் கண்ணகியின் நிலை, துன்பத்தின் உச்சக்கட்டமாகும். இதனை,

**“அழூதேங்கி நிலத்தின்வீழ்ந் தாயிழையாள் தன்கணவன்**
**தொழுதகைய திருந்தடியைத் துணைவளைக்கை யாற்பற்ற”**

(மதுரைக் காண்டம், ஊர்சூழ்வரி, 64,65)

என்கிறார் இளங்கோவடிகள்! இதுவே, புகார் நகரில் அமைதியாக வாழ்ந்த கண்ணகி, மதுரையில் அரசனை எதிர்க்கவும், நகரை எரிக்கவும் காரணம் ஆகும்.

கண்ணகி, இதுவரை வீட்டைவிட்டு வெளியே செல்லக்கூட அறியாதவள். ஆனால் கோவலன் வாழவேண்டி அழைத்ததும் தன் கணவனோடு மதுரைக்குச் சென்றுதன் கணவன் கள்வன் என்றுகுற்றம் சுமத்திகொலை செய்யப்பட்ட பிறகு மதுரை வீதியில் மதுராபுரித் தெய்வமே உயிர் பெற்றுவீதியில் செல்வது போல கண்ணகி பாண்டிய மன்னன் அரண்மனை நோக்கிச் செல்கிறாள். பிறகு மன்னனிடம்

**”தேரா மன்னா ------- ---------**
**------- ------- --------- ----------**
**வாழ்தல் வேண்டி ஊழ்வினைத் துரப்பச்**
**சூழ்கழல் மன்னா! நின்னகர்ப் புகுந்து. ஈங்கு**
**என்காற் சிலம்புபகர்தல் வேண்டி**
**நின்பாத கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி**
**கண்ணகி என்பதுஎன் பெயரே"**

பாண்டிய அவையில் வழக்குரைத்து மெய்சிலிர்க்க வைக்கிறாள் கண்ணகி அதாவது 'சாதுமிரண்டால் காடு கொள்ளாது' என்பது போல மதுரை மாநகரையே தீக்கிறையாக்குகிறாள் (Manivasagan, 2019, Meenakshi Sundaranar, 2012).

இப்படி தன் ஊரையும் குலப் பெருமையையும் தன் கணவனையும் அறிமுகம் செய்து தன்னுடைய பெயரையும் கூறினாள் என்றால் கண்ணகியின் கோபத்தின் உச்சக்கட்டத்தின் அளவு வார்த்தைகளால் சொல்ல இயலாது. மேலும் ஒருபெண் சாதாரணமாக மென்மைத் தன்மை உடையவள். ஆனால் தன் கணவனுக்கு பழி உண்டாயின் தீத்தெய்வமே அச்சப்படும், தன் கணவனுக்காக உயிரையே

விடத் துணிபவளே கற்பில் சிறந்த பெண் அதனாலேயே இளங்கோவடிகள் கண்ணகியைப் பெண் தெய்வமாக உயர்த்திப் போற்றியிருப்பதை பதிவுசெய்துள்ளார்.

**மாதவி**

நடனக் கணிகையர் குலத்தில் பிறந்த மாதவிக்கு கண்ணகிக்கு கிடைத்த பேறு கிடைக்கவில்லை. அது அவளுடைய குலத்திற்கு கிடைத்தவிட்ட சாபம் என்று எண்ணத் தோன்றுகிறது. அதனால் தாய் வழியில் மாதவி அறிமுகப்படுத்தப்படுகிறாள். விண்ணில் இருந்து மண்ணிகத்திற்கு வந்து ஊர்வசி, மாதவி என்று பெயர் பெற்றாள். 'அந்த ஆதி மாதவியின் வழியில் தோன்றியவள் சிலப்பதிகாரம் மாதவிக்கு இந்தக் கதையை இளங்கோவடிகள் வாக்காலேயே அறிவோம். (Sivagnanam 2014)

**”தெய்வமால்வரைத் திருமுனிஅருள**

**------ ------ ------- --------**

**மலைப்படும் சிறப்பின் வாணூர் மகளிர்**

**சிறப்பிற் குன்றா செய்கையோடு பொருந்திய**

**பிறப்பிற் குன்றாப் பெருந்தோள் மடந்தை**

**தாதவிழ் புரிகுழல் மாதவி”**

அகத்தியர் சாபத்தால் விண்ணுலகத்து மாதவி மண்ணுலகம் வந்ததையும், அவள் வழியில் மாதவி தோன்றியதையும் கடலாடு காதையில் இரண்டாவது முறையாக இளங்கோவடிகள் கூறுகிறார். [Manivasagan, 2019)

மாதவி நடனப் பரத்தையர் குலத்தில் பிறந்தாலும் பிறப்பிற்குன்றாச் செய்கையொடு பொருந்தியவள் என்றும் பிறப்பிற் குன்றாப் பொருள் தோள் மடந்தை' என்றும் இளங்கோவடிகள் மாதவியை உயர்த்திக் கூறுகிறார்.

மாதவியிடம் நாம் காணும் ஒழுக்கம் குல ஒழுக்கம், அல்லவென்றாலும் அதற்கு விலக்கான பிறப்பொக்கும் என்பது இளங்கோ தரும் விளக்கம் பன்னிரண்டு வயது நிரம்பிய ஆடலும் பாடலும் குறைவறப் பயின்ற அழகையும் நிறைவுறப் பெற்றிருந்த மாதவி மன்னன் முன் நாட்டியம் அரங்கேற்றினாள். பரிசாக மாலையும் (1008) ஆயிரத்து எட்டு கழஞ்சு பொன்னையும் பச்சை தலைக்கோல்பட்டம் பெறுகிறாள்.

கோவலன் மனையகம் மறந்து மாதவியுடன் தங்கி வாழ்ந்து வருகிறான் கடலாடு காதையில் மாதவியுடன் கோவலன் கடலாடச் சென்றான். இருவரும் யாழ் இசைத்து பாடினார்கள். இந்திரவிழாவின் போது மாதவியால் ஊடல் கொண்ட கோவலன் கண்ணகி கடலாடுக் காதையில் கானல் வரி பாடல் பாடிக் கொண்டிருக்கையில் ஊடல் கொள்கிறான் கோவலன் மனத்திரையில்அவ்வப் போது கண்ணகி தோன்றியிருக்கக் கூடும். அதனால்தான் மனையாளை மறந்தான் என்று கூறாது 'மனையகம் மறந்தான்" என்று கூறுகிறார். இளங்கோவடிகள் 'மனம் இருவகைப்பட்டது என்பர். ஞானியர் ஒன்று உள்மனம் மற்றொன்று புறமனம் மாதவியின் மனைபுகுந்த பின்னரும் அவனுடைய உள்மனத்தில் கண்ணகியைப் பற்றி நினைவு இருந்து வந்தது (Manivasagan 2019).

மாதவி அவனுடைய உள்மனத்தில் இடம்பிடிக்கவில்லை கோவலன் கனப்பொழுதில் மாதவியின் கைப்பிடியை உதறிவிட்டு கண்ணகியை வந்து அடைகின்றான். மாதவி பரத்தமை குலத்தில் பிறந்தவளாகயிருந்தாலும் கோவலனைத் தவிர மற்றொரு ஆடவனை மனத்தாலும் நினைத்தறியாதவள் தன் மனத்தை கோவலனுக்கு கோயிலாக்கினாள். "நம்மை மறந்தாரை நாம் மறவோம்" என்று கோவலன் நினைவிலே வாழ்ந்தாள். தனக்கு குழந்தை பிறந்த செய்தியைக் கோவலனுக்கு தெரியப்படுத்துகிறாள்.

குழந்தைக்கு குலத்தெய்வத்தின் பெயரை சூட்டச் சொல்கிறான். கோவலன் தன் மகளை, கண்ணகி மகள் என்றும் குலத்தெய்வத்தின் பெயரான மணிமேகலை என்ற தெய்வத்தின் பெயரையும்

சூட்டி மகிழ்கிறான். கணிகையர் குலத்தில் பிறந்தாலும் குலமகளாக வாழ ஆசைப்பட்ட மாதவியின் வாழ்வு, துன்ப வாழ்வாக அமைந்துள்ளது. கணவன் போன்ற கோவலனால் ஐயப்பட நேரிட்ட ஒரே அவலப் பாத்திரம், இரக்கத்திற்குரிய 'மாதவி' ஒருத்தி மட்டுமே! மாதவியின் இந்திர விழா ஆட்ட முத்திரைகளும் வேடப் புனைவுகளும் அவையோரின் ஆரவாரப் பாராட்டுகளும் கோவலன் மனத்தில் வெறுப்பையே விளைவித்தன. ஆழமான இந்த வெறுப்பின் அடையாளமாகவே கானல்வரிப் பாட்டில் கண்ணகியின் மேன்மையைப் பாராட்டிப் புகழ்கின்றான், கோவலன்.

**"மன்னும் ஓர் குறிப்பு உண்டு,**
**இவன்தன் நிலை மயங்கினான் எனக்**
**கலவியால் மகிழ்ந்தாள் போல்,**
**புலவியால் யாழ் வாங்கித்**
**தானும் ஓர் குறிப்பினாள் போற்"**

(புகார்க் காண்டம், கானல்வரி, கட்டுரை, 24)

மாதவியின் மனத்தைப் புண்படுத்த வேண்டும் என்று கோவலன் பாடுகின்றான். மாதவி அதே துன்பத்தைக் கோவலனுக்கு உண்டாக்க, அவள் பாட இருவரும் மனம் புண்பட்டுப் பிரிய நேரிடுகின்றது. தான் அடைந்த பிரிவுத் துன்பத்தைக் கோவலனுக்குப் புலப்படுத்தினால், தன் மீது இரக்கம் கொண்டு அவன் வரமாட்டானா? என்பதே மாதவியின் ஏக்கம். அந்த ஏக்கமும் பொய்த்து, துன்பத்தை மிகுவிக்கிறது.

**"இரவிடைக் கழிதற்கு, என் பிழைப்பு அறியாது,**
**கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்"**

(மதுரைக் காண்டம், புறஞ்சேரி இறுத்த காதை, 90,91)

கோசிகனிடம் மாதவி கொடுத்து அனுப்பிய இரண்டாம் மடல், அவளுடைய துன்ப உள்ளத்தின் உச்சமாக அமைந்துள்ளது. கோவலன் கொலையுண்ட செய்தியை அறிந்ததும் மாதவி தன் அழகு நலன்களையெல்லாம் தொலைத்து, மணிமேகலையுடன் துறவு மேற்கொள்கிறாள். கோவலனைப் பிரிந்து, அவன் இறந்தவுடன் துறவு பூணும் மாதவி பாத்திரம் துன்பத்திற்கு உரியதாகும். எனினும், கண்ணகிக்கு சமமாக கற்பில் மாதவியும் போற்றுதலுக்கு உரியவளாகிறாள்.

**கோப்பெருந்தேவி**

கோப்பெருந்தேவி தீக்கனவு காண்கிறாள். தான் கண்ட கனவு குறித்து முதலில் தோழிக்கும். பிறகு ஆசானுக்கும் தெரிவிக்கின்றாள்.

**'குடையொடு கோல் விழநின்று நடுங்கும்**
**கடைமணியின் குரல் காண்பெண் காண்எல்லா**
**திசைஇரு நான்கும் அதிர்ந்திடும் அன்றிக்**
**கதிரை இருள்விழுங்கக் காண் பெண்காள்"**

என்று சிலப்பதிகாரம் குடையும் செங்கோலும் கீழே விழுந்தது இடைவிடாமல் கடைவாயில் மணியின் ஓசையும் கேட்டேன். மணியோசை எட்டுத்திக்கும் அதிர்ந்தது ஞாயிற்றின் இருள் விழுங்கியது என்று தன் நாட்டுக்கும் அரசனுக்கும் தீமை உண்டாகப் போகிறது (Maniva2019) என்று பதறுகிறாள். வினைபயன் வேலைச் செய்யத் தொடங்குகிறது. நாடக நங்கையர் ஆடிய ஆட்டத்தின் அழகில் மன்னன் தன்னை மறந்து இருப்பதை காணப் பொறுக்காத அரசியார் தலைவலி வந்ததென்று பொய்சொல்லி செல்கிறாள். மன்னனும் வினை விரித்த வலையில் வாழ்கின்றான்.

கள்வனைப் பிடிப்பது பொற்கொல்லன் வேலையல்ல. தற்செயலாக கள்வன் பொற்கொல்லன் பார்வையில் பட்டிருப்பினும் அதுபற்றி தகவல் ஊர்க் காவலரிடம் தராது வஞ்ச நெஞ்சினான

பொற்கொல்லன் 'கள்வன் பிடிபட்டதகவலை மன்னனிடம் அறிவிக்கின்றான். கள்வனைச் சிறையில் வைக்குமாறு ஆணையிட்டு மறுநாள் அரசவைக்கு அவனைக் கொண்டுவரச் செய்து, அவையிலுள்ள அமைச்சர்களுடன் ஆலோசித்து, கள்வனுடைய வாக்கு மூலத்தையும் கேட்டு, அதன்பின் தீர்ப்பளிக்க வேண்டியது அரசனுடைய கடமை. இந்த நடைமுறை சிலப்பதிகாரக் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் அரசியின் ஊடலால் மனம் குழப்பம் அடைத்திருந்த பாண்டிய வேந்தன் அந்தக் கடமைகளைக் கைவிட்டான்.

அரசன் குற்றவாளிக்கு தண்டனை விதிப்பது அரியாசனத்தில் இருக்கும் போதுதான், மாறாக கோவலன் மீது கூறிய பொய் வழக்கில் அந்தப்புரத்திற்கு சென்று கொண்டிருக்கும் போது இடை வழியில் மரணதண்டனை அளித்து தீர்ப்பளித்தான் மன்னவன். மனைவியின் ஊடலை விரைவில் தீர்க்க வேண்டுமென்ற அவசரத்திற்கும் என் தேவியின் காற்சிலம்புகள் கள்வனுடைய கையில் இருந்ததென்றால் அவனைக் கொன்று அச்சிலம்பு கொணர்க' என்று மன்னன் காவலர்களுக்கு கட்டளைப் பிறப்பித்தான். கள்வனை மன்னன் விசாரிக்கவில்லை. பொறுப்பை கொலைஞரிடமே விட்டுவிட்டான் பாண்டிய மன்னன். இதற்கு இளங்கோவடிகள்,

**வினை வினை காலம் ஆதலின் யாவதும்**
**சினைஅலர் வேம்பன் தேரான்**

என்று சமாதானம் கூறுகிறார் (asagan 2019) கோவலன், நீதி விசாரிக்கப்படாமல் கொலை செய்யப்படுகின்றான்.

வழக்குரைக்க வந்த கண்ணகியைக் கண்டதும் ‘கணவனை இழந்தாள் கடையகத்தாளே’ என்று வாயிற்காவலன் கூறியமை, பாண்டிய மன்னனின் நினைவுக்கு வரவில்லை. அவன் வாழ்க்கையில் பரபரப்பூட்டப் போகும் ஒன்றைப் பற்றி அறியாதவனாக இருக்கும் பாண்டிய மன்னனின் நிலை இரங்கத்தக்கதாக உள்ளது.

**“நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!**
**என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே!’எனத்**
**தேமொழி! உரைத்தது செவ்வை நன்மொழி;**
**யாம் உடைச்சிலம்பு முத்துஉடை அரியே”**

(மதுரைக் காண்டம், வழக்குரை காதை, 65-68)

‘தேராமன்னா! செப்புவது உடையேன்’ என்று தனியாக வந்து நீதி கேட்கும் கண்ணகியின் அவலத்துடன், புகழ்மிக்க, செங்கோலாட்சி புரிந்த பாண்டிய மன்னன், நீதிநெறி பிழைத்தமை கவலைக்கிடமாக உள்ளது. கோவலனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பை உடைத்து தன் அறியாமையை இந்தப்பெண் உணர்ந்து தெளியட்டும் என்பது பாண்டிய மன்னனின் எதிர்பார்ப்பு. மன்னனின் நம்பிக்கையும் நல்ல எண்ணமும் ஒரு நொடிப் பொழுதிற்குள் நொறுங்கி விடுகின்றது. இதனால், பாண்டிய மன்னன் மீது இரக்கம் ஏற்படுகின்றது. கண்ணகி உடைத்த சிலம்பில் இருந்து மாணிக்கப்பரல் பாண்டிய மன்னனின் முகத்தில் தெறித்து விழுந்ததும், தன்னை முதன்முதலாக உணரத் தொடங்குகின்றான்.

**“யானோ அரசன்? யானே கள்வன்**
**மன்பதை காக்கும் தென்புலம் காவல்**
**என்முதல் பிழைத்தது; கெடுக என்ஆயுள்என**
**மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே”**

(மதுரைக் காண்டம், வழக்குரை காதை, 75-78)

பாண்டிய மன்னனின் இறப்பு மட்டும் நிகழாமல் இருந்திருந்தால், பொற்கொல்லனுக்கு அடுத்த குற்றவாளியாக மன்னன் காணப்படுவான்; ஆனால், தனக்குத்தானே கெடு மொழி கூறிக்கொண்டு சாகக்கூடிய கொடும்சாவே அவன் மீதுள்ள வெறுப்பைத் துடைத்து விடுகின்றது. தான் செய்த தவறுக்கு தண்டனையாக அரசன் உயிர்த்தியாகம் செய்கிறான். பாண்டிய மன்னனின் இறப்பு,

**"கணவனை இழந்தோருக்குக் காட்டுவதுஇல் என்று**
**இணைஅடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி!"**

(மதுரைக் காண்டம், வழக்குரை காதை, 80-81)

அரசியின் முடிவுக்குக் காரணமாக அமைந்து, சிலப்பதிகாரக் காப்பியத்தில் மேலும் துன்பத்தை மிகுவிக்கின்றது. கோப்பெருந்தேவியும் கணவனை இழந்தோர்க்கு புகலிடம் பெறுவதற்கு இந்தஉலகில் எதுவுமே இல்லை என்று கருதி தன் கணவனின் திருவடிகளைத் தொட்டுத் தொழுது கொண்டே தானும் உயிர் நீத்தார் பொதுவாகச் பெண்கள்,

**மெய்யிற் பொடியும் விரிந்தகருங்குழலும்**
**கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் வையைக் கோன்**
**கண்டனவேதோற்றான் அக்காரிகைதன் சொற்செவியில்**
**உண்டனவே தோற்றான் உயிர்**

என்று சிலப்பதிகாரத்தில் விளக்கப்பட்டுள்ளது (Manivmagan.2019).சிலப்பதிகாரத்தில் எதிர்நோக்கும் நிகழ்ச்சிகளுக்கு முரணான எதிர்த்திருப்பங்கள் நடந்து, துன்பத்தை மிகுவிப்பதாக உள்ளன.

**முடிவுரை**

சிலப்பதிகாரம், தமிழின் ஐம்பெருங்காப்பியங்களில் முதன்மையானது ஆகும். இக்காப்பியம் மகளிரின் இல்லறக் கடமைகள், சமூகப் பண்புகள், அரசியல் சூழல் மற்றும் கற்பு நெறியைக் கவனமாக வெளிப்படுத்துகிறது. கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி ஆகிய கதாப்பாத்திரங்கள் மூலம் பெண்களின் உயரிய மனநிலை, பொறுப்பு, துணிவு மற்றும் சமூகப் பண்பு ஆகியவைகள் படைத்தவர்களாக முன்வைக்கப்படுகின்றனர். கண்ணகி தன் கணவனுக்கு அப்பாற்பட்ட நெஞ்சுடன், சமூகத் துருவல்களின் இடையே தன்னுடைய கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றுகிறாள். அவள் இன்பம், துன்பம், மறக்கமுடியாத துன்ப நிலைகள் அனைத்தும் இக்காப்பியத்தின் மூலதனமாக அமைந்துள்ளன. அதே நேரத்தில் மாதவி போன்ற கதாப்பாத்திரங்கள், பிறப்பிலிருந்து குலச் செயல் மற்றும் இல்லற ஒழுக்கம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றனர்.

சிலப்பதிகாரம் பெண்களை சமூகத்தில், இல்லத்தில் மற்றும் அரசியலில் உள்ள முக்கிய பங்களிப்பாளர்களாகவே காட்டுகிறது. பெண்களின் மன உறுதி, கற்பு திறன் மற்றும் அறநெறி கடைப்பிடிப்பு, அவர்களுக்கு உயரிய மரியாதை அளிக்குமாறு சமூகத்திற்கு உதவும் என்பதைக் காப்பியம் உணர்த்துகிறது. இக்காப்பியத்தின் இலக்கியப் பாரம்பரியமும், கதாப்பாத்திரங்களின் ஆழமான மனித அனுபவங்களும், சமூகவியல் நோக்கிலும், நெறிச்சிந்தனையின் அடிப்படையிலும், தமிழின் பெண்கள் சமூகத்தில் வகிக்கும் இடத்தை புரிந்துகொள்ள உதவுகின்றன. முடிவாக, சிலப்பதிகாரம் பெண்களின் பெருமையை வெளிப்படுத்தும் மற்றும் அவர்களின் மனநிலையும் கடமைகளையும் கவனிப்பது குறித்த ஒரு முக்கிய இலக்கிய சான்றாகத் திகழ்கிறது. கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி போன்ற கதாப்பாத்திரங்கள், அவர்களின் வாழ்க்கை, கற்பு மற்றும் சமூகப் பண்புகளை வெளிப்படுத்துவதில், தமிழ்ச் சமூகம் கடந்த காலத்தில் எப்படி பெண்களைப் பாராட்டியது என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

**துணைநின்ற நூல்கள்**


1. உவே.சாமிநாதையர்(தொ.ஆ),(பதிப்பு.1985)சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லருரையும் , தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழக வெளியீடு. தஞ்சாவூர்.
2. ந.யோகாம்பாள், (முதல் பதிப்பு 2015) காப்பிய மகளிர் ஒரு புதிய கண்ணோட்டம் முல்லைப் பதிப்பகம் சென்னை.
3. அப்பாதுரை, கே. (2004). சிலம்பு வழங்கும் செல்வம். சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
4. தேவநேய பாவாணர், (2012). திருக்குறள் மறுப்புரை. சென்னை: கவுரா பதிப்பகம்.
5. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை. (2010). கவிமணி கவிதைகள். சென்னை: பாரி நிலையம்.
6. மணிக்கம், வி.எஸ். (2010). காவிய பார்வை. சென்னை: ராமையா பதிப்பகம்.
7. மணிவாசகன், ஜி. (2019). சிலப்பதிகாரம் தெளிவுரை. சென்னை: உமா பதிப்பகம்.
8. மீனாட்சி சுந்தரநாராயணர், டி.பி. (2012). சிலப்பதிகாரக் கட்டுரைகள். சென்னை: காவ்யா பதிப்பகம்.
9. பரிமேலழகர். (1986). திருக்குறள். சென்னை: சாரதா பதிப்பகம்..